2006 ஜனவரி 27] [பேரவைத் தலைவர்]

தரம் பெற்றவர் – எதிரிகளும் உள்ளூற மதிக்கும் தரம் பெற்றவர்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

எவருக்கும் தாழாத சிரம் பெற்றவர்;

அன்னையென அள்ளித்தரும் கரம் பெற்றவர்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மறம் பெற்றவர் – பகையை நடுங்க வைக்கும் மறம் பெற்றவர்; (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

திறம் பெற்றவர் – அனைத்துத் துறைகளிலும் பன்மொழிகளிலும்

திறம் பெற்றவர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நிறைவாக ஒன்று.

வரம் பெற்றவர் – மீண்டும் முதல்வராய் வர தமிழ் மக்களிடம் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வரம் பெற்றவர். வரம் பெற்றவர் – மீண்டும் முதல்வராய் வர தமிழ் மக்களிடம் வரம் பெற்றவர். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

செம்பொன் மேனி, செந்தமிழ் நாயகி அன்னையை வணங்கி, அனைத்து உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

9. அரசினர் தீர்மானங்கள் — *தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2006 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-27 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. திருவாளர்கள் ஆக்ஷன் எய்டு இண்டர்நேஷனல் இந்தியா, சென்னை என்ற நிறுவனம், அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அந்த நிறுவனத்திற்கு விற்பனை செய்த குடும்பப் பயனுக்கான பொருட்கள் அடங்கிய சிப்பங்களுக்கு மறுவிற்பனை வரியைப் பொறுத்தவரையில் விலக்கு அளித்தது குறித்து வணிக வரித் துறையின் 8–9–2005 ஆம் நாளிட்ட 96 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

60. வணிக வரித் துறையில் உருவாகி, அதன் பின்னர் திருத்தப்பட்டவாறான 30–11–2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II - பிரிவு 2ல் வெளியிடப்பட்ட II - (2)/வ.வ./892 (e-4) 2001 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் மற்றும் வணிக வரித் துறையில் 30.11.2001 ஆம் நாளன்று உருவாகி 30–11–2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் III - பிரிவு 1 (a) ல் வெளியிடப்பட்ட SRO A 72 (a-2) / 2001 ஆம் எண் கொண்ட முந்தைய அறிவிக்கையினை இரத்து செய்தும், வணிக வரி உதவி ஆணையாளர், வணிக வரி துணை ஆணையாளர்